# தேசிய வருமானமும் செலவும்

## பொதுவான போக்குகள்

1983 இன் உள்நாட்டுக் குழப்பங்கள் தொடங்குவதற்கு முன்னான காலப் பகுதியில் காணப்பட்ட பொருளாதார நடவடிக்கைப் பண்புகளின் உயர் வளர்ச்சி ஆற்றலின் புத்துயிர்ப்பொன்று 1990 இல் காணப்பட்டது. 1989 இன் 2.3 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1990 இல் உண்மை நியதிகளில் மொத்தத் தேசிய உற்பத்தி 6.6 சதவீதத்தினால் அதிகரித்தது. இது 1985–1989 ஐந்து ஆண்டுக் காலப் பகுதியில் எய்தப்பெற்ற மொத்தத் தேசிய உற்பத்தியின் சராசரி ஆண்டு வளர்ச்சியான 2.7 சதவீதத்தினைவிடக் குறிப்பிடத்தக்க மேம்பாடொன்றினை எடுத்துக் காட்டுவதாக உள்ளது.

அனைத்துத் துறைகளும் வளர்ச்சியைப் பதிவுசெய்தவேளையில், வேளாண்மைத்துறையின் விரிவாற்றலே 1990 இன் மேம்பட்ட பொதுவான வளர்ச்சிச் செயலாற்றத்திற்குப் பாரியவகையில் பங்களிப்புச் செய்தது. சாதகமான வானிலைத் தன்மைகளும் நாட்டின் பல பாகங்களில் பாதுகாப்பு நிலைமை மேம்பட்டமையும் இலங்கையின் மொத்தத் தேசிய உற்பத்தியின் நாலில் ஒரு பங்கிற்கு வகைகூறும் வேளாண்மைத்துறையின் உறுதியான மீட்சிக்கு உதவின. 1990 இல் காட்டுத்தொழிலையும் மீன்பிடித் தொழிலையும் உள்ளடக்கிய வேளாண்மைத் துறையின் வெளியீட்டு அளவு 8.8 சதவீதத்தினால் அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. மொத்தத் தேசிய உற்பத்தியின் பொதுவான வளர்ச்சியில் அதனது பங்களிப்பு 31 சதவீதமாக இருந்தது. கடந்த அண்மைக் காலங்களில் நிலையான வளர்ச்சி ஆற்றலைப் பேணிய தயாரிப்புத்துறை 1990 இல் தொடர்ந்தும் நீடித்த ஆற்றலைக் கொண்டிருந்தது. கைத்தொழில் ஏற்றுமதிகளின் அதிகரிப்புக்களைத் தொடர்ந்து 1990 இல் தயாரிப்புத்துறை 9.4 சதவீத வளர்ச்சியொன்றினைப் பதிவு செய்ததாக மதிப்பிடப்பட்டுள்ளவேளையில் மொத்தத் தேசிய உற்பத்தியின் வளர்ச்சியில் அதனது பங்களிப்பு 25 சதவீதமாக இருந்தது.

1989 இல் 5.4 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்த சுரங்க அகழ்வு, கல்லுடைத்தல்துறை 1990 இல் சிறப்பாகச் செயலாற்றி முக்கியமாக இரத்தினக் கல் அகழ்வின் விரிவாக்கத்தின் காரணமாக 9.1 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. நாட்டின் பாதுகாப்பு நிலைமையில் காணப்பட்ட விரைவான மேம்பாட்டினைத் தொடர்ந்து கட்டுமான நடவடிக்கைகள் புத்துயிர்பெற்று 1990 இல் இத்துறையின் மிதமான வளர்ச்சிக்கு ஏதுவாகியது.

1989 உடன் ஒப்பிடுகையில் (3.2 சதவீதம்) வர்த்தகம், போக்குவரத்து, வங்கிப்பணிகள் என்பனவற்றினதும் இவற்றைப்போன்றே சுற்றுலாத்துறையுடன் தொடர்புபட்ட பணிகளினதும் விரிவாக்கமானது 1990 இல் பணிகள் துறையின் உயர் வளர்ச்சி வீதத்திற்கு (4.3 சதவீதம்) வழி வகுத்தது.

## அட்டவணை 1.6

### நிலையான விலைகளில் (1982) மொத்தத் தேசிய உற்பத்தியின் துறைவாரியான உள்ளடக்கமும் அதிகரிப்பும் 1988 – 1990

| துறை | கூட்டப்பட்ட பெறுமதி (ப. ரூ. இ.) | | | மொத்தத் தேசிய உற்பத்தியில் சதவீதப் பங்கு | | | முன்னைய ஆண்டுக்கு மேலான அதிகரிப்பு (ப. இ. ரூ.) | | மொத்த தேசிய உற்பத்தி அதிகரிப்பின் சதவீதப் பங்கு | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1988* | 1989* | 1990* | 1988 | 1989 | 1990* | 1989 | 1990 | 1989 | 1990 |
| 1. வேளாண்மை, காட்டுத் தொழில், கடற்றொழில் ... | 27,984 | 27,666 | 30,100 | 24.1 | 23.3 | 23.7 | - 318 | 2,434 | - 12.0 | 30.9 |
| 1.1 வேளாண்மை ... | 23,762 | 23,311 | 25,818 | 20.4 | 19.6 | 20.4 | - 451 | 2,707 | - 17.0 | 34.4 |
| 1.1.1 தேயிலை ... | 2,926 | 2,668 | 3,004 | 2.5 | 2.2 | 2.4 | - 258 | 336 | - 9.7 | 4.3 |
| 1.1.2 இறப்பர் ... | 770 | 697 | 718 | 0.7 | 0.6 | 0.6 | - 73 | 21 | - 2.7 | 0.3 |
| 1.1.3 தெங்கு ... | 2,501 | 3,210 | 3,261 | 2.2 | 2.7 | 2.6 | 709 | 51 | 26.7 | 0.6 |
| 1.1.4 நெல் ... | 6,312 | 5,258 | 6,467 | 5.4 | 4.4 | 5.1 | -1,054 | 1,209 | - 39.6 | 15.4 |
| 1.1.5 ஏனையவை ... | 11,253 | 11,478 | 12,368 | 9.7 | 9.7 | 9.8 | 225 | 890 | 8.5 | 11.3 |
| 1.2 காட்டுத் தொழில் ... | 1,943 | 1,985 | 2,030 | 1.7 | 1.7 | 1.6 | 42 | 45 | 1.6 | 0.6 |
| 1.3 கடற்றொழில் ... | 2,279 | 2,370 | 2,252 | 2.0 | 2.0 | 1.8 | 91 | - 118 | 3.4 | - 1.5 |
| 2. சுரங்கம் அகழ்தலும் கல் உடைத்தலும் ... | 3,392 | 3,576 | 3,901 | 2.9 | 3.0 | 3.1 | 184 | 325 | 6.9 | 4.1 |
| 3. தயாரிப்புத் தொழில் ... | 19,622 | 20,488 | 22,427 | 16.9 | 17.2 | 17.7 | 866 | 1,939 | 32.6 | 24.6 |
| 3.1 மரப்பயிர் பதனிடல் ... | 3,273 | 3,257 | 3,530 | 2.8 | 2.7 | 2.8 | - 16 | 273 | - 0.6 | 3.5 |
| 3.2 தொழிற்சாலைக் கைத்தொழில் ... | 14,030 | 15.500 | 17,085 | 12.1 | 13.0 | 13.5 | 1,470 | 1,585 | 55.3 | 20.1 |
| 3.3 சிறு கைத்தொழிலும் ஏனையவையும் ... | 2,319 | 1,731 | 1,812 | 2.0 | 1.5 | 1.4 | - 588 | 81 | - 22.1 | 1.0 |
| 4. கட்டடவாக்கம் ... | 8,463 | 8,514 | 8,684 | 7.3 | 7.2 | 6.9 | 51 | 170 | 1.9 | 2.2 |
| 5. மின்வலு, வாயு, நீர், நலத்துறைப் பணிகள் ... | 1,499 | 1,526 | 1,681 | 1.3 | 1.3 | 1.3 | 27 | 155 | 1.0 | 2.0 |
| 6. போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல், தொடர்பூட்டல் ... | 13,619 | 13,883 | 14,410 | 11.7 | 11.7 | 11.4 | 264 | 527 | 9.9 | 6.7 |
| 7. மொத்த, சில்லறை வர்த்தகம் ... | 25,164 | 25,588 | 26,497 | 21.7 | 21.5 | 20.9 | 424 | 909 | 15.9 | 11.5 |
| 8 வங்கித் தொழில், காப்புறுதி, உண்மைச் சொத்து ... | 5,819 | 6,168 | 6,556 | 5.0 | 5.2 | 5.2 | 349 | 388 | 13.1 | 4.9 |
| 9 குடியிருப்புக்களின் உடைமை ... | 3,603 | 3,650 | 3,705 | 3.1 | 3.1 | 2.9 | 47 | 55 | 1.8 | 0.7 |
| 10. பொது நிருவாகமும் பாதுகாப்பும் ... | 5,462 | 6.140 | 6,340 | 4.7 | 5.2 | 5.0 | 678 | 200 | 25.5 | 2.5 |
| 11. பணிகள் (வேறு எங்கும் குறிப்பிடப்படாதவை) ... | 4,423 | 4,530 | 4,955 | 3.8 | 3.8 | 3.9 | 107 | 425 | 4.0 | 5.4 |
| 12. மொத்த உள்நாட்டு உற்பத்தி ... | 119,050 | 121,729 | 129,256 | 102.4 | 102.4 | 102.0 | 2,679 | 7,527 | 100.7 | 95.6 |
| 13. வெளிநாட்டிலிருந்து கிடைத்த தேறிய காரணி வருவாய் ... | – 2,836 | – 2,855 | – 2,509 | – 2.4 | – 2.4 | – 2.0 | – 19 | 346 | – 0.7 | 4.4 |
| 14. மொத்தத் தேசிய உற்பத்தி ... | 116,214 | 118,874 | 126,747 | 100.0 | 100.0 | 100.0 | 2,660 | 7,873 | 100.0 | 100.0 |

* தற்காலிகமானவை

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

நடைமுறைக் காரணிச் செலவு விலைகளில் மொத்தத் தேசிய உற்பத்தி யானது (மொ.தே.உ.) ரூ. 2,850,000 இலட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது முன்னைய ஆண்டைவிட 27.9 சதவீத அதிகரிப்பை எடுத்துக் காட்டு கின்றது. பொருளாதாரத்தில் பொதுவான விலை மாற்றங்களை எடுத்துக் காட்டும் குறிகாட்டியாகிய உள்ளடக்க மொத்தத் தேசிய உற்பத்திச் சுருக்கி 1989 இன் 9.7 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1990 இல் 20.0 சத வீதத்தினால் உயர்வடைந்து இவ்வாண்டில் விலைகளின் அதிகரிப்பு வீதத்தில் விரைவுத் தன்மையையும் பிரதிபலித்தது. இதன்படி நிலையான விலைகளில் (1982) மொத்தத் தேசிய உற்பத்தி ரூ. 1,270,000 இலட்சமென மதிப்பிடப் பட்டுள்ளதோடு இது 1989 இனைவிட 6.6 சதவீதம் கொண்ட அதிகரிப்பொன் றாகும். இதே வேளையில் வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருவாய்க்குச் சீராக்கப்பட்ட மொத்தத் தேசிய உற்பத்தி என வரைவிலக்கணம் கூறப்படும் மொத்த உள்நாட்டு உற்பத்தி உண்மை நியதிகளில் 6.2 சதவீத அதிகரிப்பினைப் பதிவு செய்தது. மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் ஒப்பிடுசையில் மொத்தத் தேசிய உற்பத்தியின் உயர் வளர்ச்சி வீதமானது நாட்டின் வெளிநாட்டுச் சொத்துக்களின் நிலைமை மேம்பட்டதைத் தொடர்ந்து வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணிவருவாய் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தமையால் ஏற்பட்டது.

1990 இல் இலங்கையின் நடுவாண்டுக் குடித்தொகை 170 இலட்சமெனத் தற்காலிகமாக மதிப்பிடப்பட்டதோடு இது 1989 இனைவிட1.1 சதவீத அதிகரிப்பு மாகும். இதன்படி, 1990 இல் நடைமுறை விலைகளில் தலைக்குரிய மொத்தத் தேசிய உற்பத்தி ரூ. 16,745 என (ஐக்கிய அமெரிக்க டொலர் 418) மதிப்பிடப் பட்டுள்ளது. 1990 இல் நடைமுறை விலைகளில் தலைக்குரிய மொத்தத் தேசிய உற்பத்தி 26.0 சதவீதத்தினால் அதிகரித்தது. உண்மை நியதிகளில் இவ்வதிகரிப்பு 5.4 சதவீதமாகும்.

உண்மைத் தேசிய வருவாயினைப் பகுப்பாய்வு செய்யும்போது வர்த்தக மாற்று வீதங்களின் மாற்றத்தினைக் கருத்திற் கொள்ளல் வேண்டும். ஏனெனில் அது ஏற்றுமதிகளின் இறக்குமதி இயலளவின்மீது ஒரு தாக்கத்தினைக் கொண் டுள்ளது. 1990 இல் வர்த்தக மாற்று வீதங்கள் 10 சதவீதத்தினால் மோச மடைந்தன. ஆகவே உண்மைத் தேசிய வருவாய் (மொத்தத் தேசிய வருவாய் வர்த்தக மாற்று வீதங்களின் தாக்கத்திற்குச் சீராக்கப்பட்டது) உண்மை மொத் தத் தேசிய உற்பத்தியைவிடக் குறைவான (3.4 சதவீதம்) அதிகரிப்பு வீதத்தைப் பதிவு செய்தது.

செலவுப் பக்கத்தில், நடைமுறைச் சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டுச் செலவு ரூ. 3,460,000 இலட்சமென மதிப்பிடப்பட்டுள்ளதோடு இது 1989 இனைவிட 25.5 சதவீதம் கொண்ட அதிகரிப்பொன்றுமாகும். பெயரளவு நியதி களில் 1990 இல் நுகர்வுச் செலவு 23.7 சதவீதத்தினால் அதிகரித்தவேளையில் 1990 இல் ரூ. 730,000 இலட்சமென மதிப்பிடப்பட்ட மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம் 1989 இனைவிட 32.7 சதவீதத்தினால் அதிகரித்தது.

உண்மை நியதிகளில் தனியார் நுகர்வுச் செலவு 1989 இன் 1.0 சதவீத அதிகரிப்புக்கெதிராக 1990 இல் 2.7 சதவீதத்தினால் அதிகரித்தது. இதே வேளையில் அரசின் நுகர்வுச் செலவு உண்மை நியதிகளில் சிறிதளவு வீழ்ச்சியைப் பதிவு செய்தது. இவ்வாண்டில் பொதுவான நுகர்வுச் செலவு உண்மை நியதி களில் 2.1 சதவீதத்தினால் அதிகரித்தது.

1989 இல் 21.7 சதவீதமாகக் காணப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான முதலீட்டு விகிதம் 1990 இல் சிறிதளவால் 22.6 சதவீதத்திற்கு அதிகரித்தது. அரசதுறையின் முதலீடுகளில் காணப்பட்ட படிப்படியான வீழ்ச்சியினைத் தொடர்ந்து தனியார்துறையினர் முதன்மைப் பங்கேற்கும் அமைப்பு மாற்றமானது 1990 இல் முதலீட்டு அமைப்பில் தெளிவாகப் புலப்பட்ட முக்கிய பண்பாகும். இத்தகைய போக்கிற்கு இடையிலும் 1990 இல் முக்கியமாக பொருளாதார மற்றும் சமூக உள்ளமைப்புக்களை அபிவிருத்தி செய்யும் நோக்கிலான முன்னுரிமைத்துறைகளில் அரச முதலீடு செறிவாகக் காணப்பட்டது.

உள்நாட்டுச் சேமிப்புக்கள் ரூ. 470,000 இலட்சம் அல்லது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 14.8 சதவீதம் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதே வேளையில் காரணி வருவாயினதும் தனியார் வெளிநாட்டுப் பணவனுப்பல்களினதும் உயர் உட்பாய்ச்சல்கள் காரணமாக தேசிய சேமிப்பு விகிதம் 1989 இன் 14.6 சதவீதத்திலிருந்து 1990 இல் 17.5 சதவீதத்திற்கு அதிகரித்தது.

### துறைவாரியான செயலாற்றம்

மொத்தத் தேசிய உற்பத்தியின் துறைவாரியான செயலாற்றமும், நிலையான விலைகளில் (1982) கூட்டப்பட்ட பெறுமதியின் மாற்றங்களும் அட்டவணை 1.6 இல் தரப்பட்டுள்ளன. 1990 இல் காட்டுத்தொழிலையும், மீன்பிடித் தொழிலையும் உள்ளடக்கிய வேளாண்மைத்துறை 8.8 சதவீத வளர்ச்சி வீதத்தைப் பதிவு செய்துள்ளது. சாதகமற்ற வானிலைத் தன்மைகளினதும் உள்நாட்டுக் குழப்பங்களினதும் தாக்கத்தின் காரணமாக முன்னைய ஆண்டில் இத்துறை 1.1 சதவீத வீழ்ச்சியினைப் பதிவு செய்தது.

பெருந்தோட்ட வேளாண்மைத்துறையினுள் தேயிலைத் துணைத் துறையின் செயலாற்றம் மிகச் சிறப்பானதாகக் காணப்பட்டது. 1990இல் தேயிலை உற்பத்தி பதிவு செய்யப்பட்ட அதி உயர் மட்டத்தினை எய்தியதோடு அதனது கூட்டிய பெறுமதி உண்மை நியதிகளில் 1989 இனைவிட 12.6 சதவீதத்தினால் அதிகரித்தது. அதேவேளை இறப்பர், தெங்கு என்பனவற்றின் கூட்டப்பட்ட பெறுமதி முறையே 3 சதவீதத்தினாலும், 1.6 சதவீதத்தினாலும் உயர்ந்தது. வேளாண்மைத்துறையின் புத்துயிர்ப்பு நெல் மற்றும் சிறு உணவுப் பயிர்கள் துணைத் துறையில் மிகத் தெளிவாகக் காணப்பட்டது. முக்கிய நெல் உற்பத்தி மாவட்டங்களில் காணப்பட்ட சாதகமான வானிலைத் தன்மைகளின் முதன்மைக் காரணத்தினால் நெல் உற்பத்தியானது 1989 இன் தாழ்ந்த வெளியீட்டு மட்டத்திலிருந்து 23 சதவீதத்தினால் மீட்சியடைந்தது. சிறு உணவுப் பயிர்களின் வெளியீட்டு அளவு 1989 இனைவிட 8 சதவீதத்தினால் அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. முன்னைய ஆண்டின் 2 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் முக்கியமாகச் சிறு உணவுப் பயிர்கள், சிறு ஏற்றுமதிப் பயிர்கள், கோழி வளர்ப்பு மற்றும் கால்நடை வளர்ப்பு என்பனவற்றை உள்ளடக்கிய ''ஏனைய'' வேளாண்மைத் துணைத்துறை 1990 இல் கவர்ச்சியான 7.8 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. வடக்குப் பிரதேசத்தில் மீண்டும் தொடங்கப்பட்ட உள்நாட்டுக் குழப்பங்களினால் கரையோர மீன்பிடித்தொழிலுக்கு ஏற்பட்ட தடங்கல்களின் காரணமாக மீன் உற்பத்தி 5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

இரத்தினக்கல் அகழ்வில் காணப்பட்ட விரிவாக்கத்தின் முதன்மைக் காரணமாகச் சுரங்க அகழ்வு கல்லுடைத்தல் துறையின் கூட்டிய பெறுமதி 1990 இல் 9.1 சதவீதத்தினால் அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இத் துணைத் துறையின் கூட்டிய பெறுமதியின் வளர்ச்சியைப் பிரதிபலிக்கும் வகையில் இரத்தினக்கற்களின் ஏற்றுமதி வருவாய் 1989 இன் சிஉ 477 இலட்சத்திலிருந்து 1990 இல் சிஉ 539 இலட்சத்திற்கு அதிகரித்தது. இதே வேளையில் வடக்கு, கிழக்கு மாவட்டங்களில் மீண்டும் தொடங்கிய உள்நாட்டுக் குழப்பங்களின் காரணமாக அகழ்வு நடவடிக்கை தடைப்பட்டமையால் இல்மனைட்டு, ரூட்டைல் மற்றும் ஏனைய கனிப்பொருள் மணல்களின் வெளியீட்டு அளவு இவ்வாண்டில் 26 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. 1990 இல் கட்டுமான நடவடிக்கைகளின் விரிவாக்கம் கல்லுடைத்தல் துணைத்துறையின் மீட்சிக்கு வழி வகுத்தது.

1986 இலிருந்து சாதகமான வளர்ச்சி ஆற்றலைப் பேணிய தயாரிப்புத் துறை, 9.4 சதவீத வளர்ச்சியுடன் 1990 இல் தொடர்ந்தும் நீடித்த ஆற்றலைக் கொண்டிருந்தது. இந்தத் துறையின் வளர்ச்சிக்கான விசை வேகம் கைத்தொழில் ஏற்றுமதிகளின் அதிகரிப்பிலிருந்து பெறப்பட்டது.

தயாரிப்புத்துறையினுள் முதன்மைத் துணைத்துறையான தொழிற்சாலைக் கைத்தொழில் 1990 இல் உண்மை நியதிகளில் அதனது கூட்டிய பெறுமதியினை 10.2 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. ஒப்பிடுகையில் முன்னைய ஆண்டில் இத்துணைத் துறையின் வளர்ச்சி 6 சதவீதமாகும். 1990 இல் கூட்டிய பெறுமதியில் அதிகரிப்புக்களைப் பதிவுசெய்த கைத்தொழில் வகைகளாக உணவு, குடிபானம், புகையிலை (8 சதவீதம்), புடவைகள், அணியும் ஆடைகள், தோற் பொருள் உற்பத்திகள் (10 சதவீதம்), இரசாயனம், பெற்றோலியம், பிளாத்திக்கு உற்பத்திகள் (25 சதவீதம்), உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் பொறிகளும் போக்குவரத்துக் கருவிகளும் (12 சதவீதம்) என்பன விளங்கின.

இவ்வாண்டில் பெருந்தோட்ட வேளாண்மையின் அதிகரித்த வெளியீட்டின் காரணமாகத் தேயிலை, இறப்பர், தெங்கு உள்ளீட்டு உற்பத்திப் பொருட்கள் போன்ற பதனிடல் கைத்தொழில்களின் கூட்டிய பெறுமதி 1989 இன் 0.5 சதவீத வீழ்ச்சிக்கு மாறாக உண்மை நியதிகளில் 8.4 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. வருவாய்தரும் தொழில் வாய்ப்புக்களை உருவாக்கும் குறிக்கோளுடன் முறைசாரா இத்துணைத்துறைக்கு அதிகளவில் கொடுகடன் கிடைக்கத்தக்கதாக இருந்தமையினதும் அதேபோன்று நிறுவன உதவிகள் விரிவாக்கப்பட்டமையினதும் பெருமளவு காரணமாக 1989 உடன் ஒப்பிடுகையில் (1.9 சதவீதம்) 1990 இல் சிறு கைத்தொழில்கள் துணைத்துறை உயர்ந்தவீத வளர்ச்சியைக் (6.0 சதவீதம்) கொண்டிருந்தது.

1989 இன் 0.6 சதவீத வளர்ச்சியைக் கொண்ட மோசமான செயலாற்றத்துடன் ஒப்பிடுகையில் 1990 இல் கட்டுமானத்துறை 2 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. மட்டுப்படுத்தப்பட்ட அரச முதலீட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் காரணமாக அரசதுறையின் கட்டுமான நடவடிக்கைகள் மந்தமாகக் காணப்பட்ட போதும் ஆய்விற்குரிய காலப்பகுதியில் காணப்பட்ட சாதகமான முதலீட்டுச் சூழ்நிலையினைத் தொடர்ந்து தனியார்துறையில் வர்த்தகம் மற்றும் வதிவிடக் கட்டடங்களின் கட்டுமான வேலைகள் விரிவடைந்தன.

பணிகள்துறை 1989 இன் 3.2 சதவீதத்திற்கெதிராக 1990 இல் 4.3 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. இவ்வாண்டில் பணிகள்துறையின் விரிவாக்கமானது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் மொத்த அதிகரிப்பில் கிட்டத்தட்ட 34 சதவீதத்திற்கு வகை கூறியது. பணிகள் துறையினுள் மின்சாரம், வாயு, நீர், நலப்பணிகள் என்பனவற்றின் கூட்டிய பெறுமதி 10.2 சதவீதத்தினால் அதிகரித்தது. இதேவேளையில் வேளாண்மை மற்றும் தயாரிப்புத்துறைகளில் அதிகரித்த உற்பத்தியானது வர்த்தகம் மற்றும் போக்குவரத்துப் பணிகளின் உயர் வளர்ச்சிக்கு வழிவகுத்தது. 1990 இல் பொருளாதார நடவடிக்கைகளிலிருந்து கிடைத்த உயர்ந்த மட்டத்திலிருந்தான தூண்டுதலானது 1989 உடன் ஒப்பிடுகையில் 1990 இல் வங்கித்தொழில் மற்றும் நிதித்துணைத்துறைக்கு உயர் வளர்ச்சி வீதமொன்றினை எய்துவதற்கு உதவியது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் பொது நிருவாகம் மற்றும் பாதுகாப்பு என்பவற்றின் வளர்ச்சி வீதம் கணிசமாகக் குறைவடைந்து அரசபணிகளின் நிருவாகச் சீர்திருத்தங்களையும் மீளமைப்பு நடவடிக்கைகளையும் ஓரளவு பிரதிபலித்தது.

நாட்டில் மேம்பட்ட பாதுகாப்பு நிலைமைகளைத் தொடர்ந்து சுற்றுலாத் துறையில் நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட மீட்சி 1990 இல் கைகூடியதுடன் சுற்றுலா வருகைகள் 1989 இனைவிட 62 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தன. இதன் விளைவாக சுற்றுலாவிலிருந்தான வெளிநாட்டுச் செலாவணி வருவாய்கள் 1989 இன் சிஎஉ 595 இலட்சத்திலிருந்து 1990 இல் சிஎஉ 880 இலட்சத்திற்கு அதிகரித்தவேளையில் சுற்றுலா விடுதிப் பணிகளின் கூட்டிய பெறுமதி உண்மை நியதிகளில் 20 சதவீதத்தினால் அதிகரித்தது. சுற்றுலா விடுதிப் பணிகள் துணைத் துறையின் விரிவாக்கமானது ''ஏனைய பணிகள்'' துறையின் வளர்ச்சிக்கு முதன்மைத் தூண்டுகோலாக விளங்கியது.

## செலவு

1990 இல் நடைமுறைச் சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டுச் செலவு ரூ. 3,460,000 இலட்சமாகக் காணப்பட்டதோடு முன்னைய ஆண்டைவிட 25.5 சதவீத அதிகரிப்புமாகும். தனியார் நுகர்வு, அரச நுகர்வு ஆகிய இரண்டையும் உள்ளடக்கிய நுகர்வுச் செலவு 1989 இன் ரூ. 2,210,000 இலட்சத்திலிருந்து 1990 இல் ரூ. 2,740,000 இலட்சத்திற்கு அதிகரித்தது. 1990 இல் ரூ.730,000 இலட்சமென மதிப்பிடப்பட்டுள்ள மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம் 1989 உடன் ஒப்பிடுகையில் 33 சதவீத்தினால் அதிகரித்துள்ளது.

தனியார் நுகர்வுச் செலவு 1989 இன் ரூ. 1,950,000 இலட்சத்திலிருந்து 1990 இல் 24.8 சதவீதத்தினால் ரூ. 2,430,000 இலட்சத்திற்கு அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. 1990 இல் இறக்குமதி செய்யப்பட்ட நுகர்வுப் பொருட்களினதும் பணிகளினதும் தனியார் நுகர்வு 26 சதவீதத்தினால் அதிகரித்திருக்கையில் 1989 இல் இது 21 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

உள்நாட்டு வேளாண்மையின் அதிகரித்த வெளியீட்டினைத் தொடர்ந்து இறக்குமதிகள் குறைவடைந்தமையினால் 1990 இல் இறக்குமதி செய்யப்பட்ட உணவு குடிபானங்களின் மீதான செலவில் சிறிதளவு மிதமான தன்மையொன்று காட்டப்பட்டது. இதேவேளையில் 1990 இல் உந்து ஊர்திகள், உந்து ஈருருளிகள் போன்ற நீடித்துழைக்கும் நுகர்வுப் பொருட்களின் மீதான தனியார் நுகர்வுச் செலவின் அதிகரிப்பானது தெளிவாகக் காணப்பட்டது. பாதுகாப்பு, உள்நாட்டுப் பாதுகாப்பு என்பன தொடர்பான செலவு அதிகரிப்பின் முக்கிய காரணமாக 1990 இல் அரசின் நுகர்வுச் செலவு 16 சதவீதத்தினால் அதிகரித்தது.

1990 இல் நடைமுறை விலைகளில் இருப்பு மாற்றங்களையும் உள்ளடக்கிய மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம் 33 சதவீதத்தினால் அதிகரித்திருக்கையில் முன்னைய ஆண்டில் இது 8 சதவீதத்தினால் அதிகரித்தது. தனியார் துறையினதும் அரசதுறைக் கூட்டுத்தாபனங்களினதும் கூட்டான மூலதனவாக்கம் 1989 இன் 16 சதவீத அதிகரிப்புக்கெதிராக 32 சதவீதத்தினால் அதிகரித்தது. ஒப்பிடுகையில் அரசதுறையின் மூலதனவாக்கம் 5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

**மூலவளங்களின் கிடைத்தலும் பயன்பாடும்**

1990 இல் பொருளாதாரத்திற்குக் கிடைக்கத்தக்கதாயிருந்த மொத்த மூலவளங்களும் அவற்றின் பயன்பாடும் அட்டவணை 1.7 இல் தரப்பட்டுள்ளன. பொருளாதாரத்திற்குக் கிடைக்கத்தக்கதாயிருந்த மூலவளங்கள் 1989 இன், ரூ. 3,445,000 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1990 இல் ரூ. 4,430,000 இலட்சமாகக் காணப்பட்டன. மூலவளங்களின் இவ்வதிகரிப்பு மொத்தத் தேசிய உற்பத்தியின் ரூ. 690,000 இலட்சங் கொண்ட அதிகரிப்பினையும் பொருட்களினதும் காரணியில்லாப் பணிகளினதும் இறக்குமதிகளின் ரூ. 300,000 இலட்ச அதிகரிப்பினையும் கொண்டிருந்தது. மொத்த மூலவளங்களில் 62 சதவீதம் நுகர்விலும், 16 சதவீதம் மூலதனவாக்கத்திலும் செலவிடப்பட்ட வேளையில் 22 சதவீதம் பொருட்களினதும் பணிகளினதும் ஏற்றுமதிகளின் மீதானவையாக இருந்தது.

நிலையான விலைகளில் (1982) மொத்த மூலவளங்களின் கிடைக்கத்தக்க தன்மை 1989 இன் 1.0 சதவீதம் கொண்ட சிறிதளவான அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1990 இல் 3.8 சதவீதத்தினால் அதிகரித்தது.

1989 இன் 1.0 சதவீத அதிகரிப்புக்கெதிராக 1990 இல் உண்மை நியதிகளில் தனியார் நுகர்வுச் செலவு 2.7 சதவீதத்தினால் அதிகரித்தது. இதேவேளையில் பாதுகாப்புத் தொடர்பான செலவுகளின் பழுவின் கீழ் 1989 இல் உண்மை நியதிகளில் 9 சதவீதத்தினால் அதிகரித்த அரசின் நுகர்வுச் செலவு 1990 இல் சிறிதளவான வீழ்ச்சியொன்றினைப் பதிவு செய்தது.

1988 இலும், 1989 இலும் உண்மை நியதிகளில் வீழ்ச்சியடைந்த மொத்த உள்நாட்டு மூலதன வாக்கம் 1990 இல் 1.5 சதவீத வளர்ச்சியினைப் பதிவு செய்தது. சட்டுமான நடவடிக்கைகளின் விரிவாக்கமும், பொறிகளிலும், கருவிகளிலும் தனியார்துறை முதலீடுகளின் அதிகரிப்பும் 1990 இல் மொத்த உள்நாட்டு மூலதனவாக்கத்தின் வளர்ச்சிக்கு வழிவகுத்தன.

அட்டவணை 1.7

## மொத்த மூலவளங்களும் அவற்றின் பயன்பாடுகளும் 1982—1990

| விடயம் | நடைமுறைச் சந்தை விலைகளில் (ப. இ ரூ.) 1982 | 1988* | 1989* | 1990* | 1982 விலைகளில் 1982 தொகை ப.இ. ரூ. | % | 1988* தொகை ட.இ.ரூ. | % | 1989* தொகை ப.இ.ரூ. | % | 1990* தொகை ப.இ.ரூ. | % | சதவீத மாற்றம் 1988 இற்கு மேலாக 1989 | 1989 இற்கு மேலாக 1990 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. மொத்த மூலவளங்கள் ... | 145,143 | 303,753 | 344,478 | 443,612 | 145,143 | 100 | 180,300 | 100 | 182,062 | 100 | 188,895 | 100 | 1.0 | 3.8 |
| 1.1 மொ. உ. உ. சந்தை விலைகளில் ... | 99,238 | 221,982 | 251,891 | 321,057 | 99,238 | 68 | 124,864 | 69 | 127,735 | 70 | 135,655 | 72 | 2.3 | 6.2 |
| 1.2. பொருட்களினதும், காரணியல்லாப் பணிகளினதும் இறக்குமதிகள் ... | 45,905 | 81,771 | 92,587 | 122,555 | 45,905 | 32 | 55,436 | 31 | 54,327 | 30 | 53,240 | 28 | – 2.0 | – 2.0 |
| 2. பயன்பாடு ... | 145,143 | 303,753 | 344,478 | 443,612 | 145,143 | 100 | 180,300 | 100 | 188,895 | 100 | 182,062 | 100 | 1.0 | 3.8 |
| 2.1. நுகர்வு ... | 87,468 | 195,306 | 221,090 | 273,640 | 87,468 | 60 | 112,273 | 62 | 114,001 | 63 | 116,419 | 62 | 1.5 | 2.1 |
| 2.2. மொத்த உள்நாட்டு நிலையான மூலதன ஆக்கம் .. | 30,279 | 49,961 | 54,249 | 71,600 | 30,279 | 21 | 33,556 | 18 | 31,408 | 17 | 31,879 | 17 | – 7.4 | 1.5 |
| 2.2.1. அரசு<br>2.2.2. அரச கூட்டுத்தாபனங்கள் | (4,866) | (12,805) | (14,306) | (13,480) | (4,866) | (3) | (7,208) | (4) | (6,910) | (4) | (5,597) | (3) | – 4.0 | – 19.0 |
| 2.2.3. தனியார் துறை ... | (25,413) | (37,156) | (39,943) | (58,120) | (25,413) | (18) | (26,348) | (14) | (24,498) | (13) | (26,280) | (14) | – 7.0 | 7.3 |
| 2.3. இருப்புக்களில் மாற்றம் ... | 248 | 601 | 473 | 1,038 | 248 | — | 300 | — | 196 | — | 240 | — | — | — |
| 2.4. பொருட்களினதும் காரணியல்லாப் பணிகளினதும் ஏற்றுமதிகள் ... | 27,148 | 57,885 | 68,666 | 97,334 | 27,148 | 19 | 34,171 | 19 | 36,457 | 20 | 40,357 | 21 | 6.7 | 11.1 |

* தற்காலிகமானவை.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

கடந்த அண்மைக் காலங்களில் நியாயமான வளர்ச்சி வீதத்தைப் பேணிய ஏற்றுமதிகள் 1990 இல் தொடர்ந்தும் வளர்ச்சியடைந்து உண்மை நியதிகளில் 11 சதவீத வளர்ச்சி வீதத்தைப் பதிவு செய்தன. வேளாண்மை மற்றும் கைத் தொழில் ஏற்றுமதிகளினது விரிவாக்கமானது 1990 இல் ஏற்றுமதிகளின் வளர்ச் சிக்குப் பங்களிப்புச் செய்தது.

உள்நாட்டுச் சேமிப்புக்கள் 1989 இன் ரூ. 308,000 இலட்சத்திலிருந்து 1990 இல் ரூ. 474,000 இலட்சத்திற்கு அதிகரித்தன. சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதமாக உள்நாட்டுச் சேமிப்புக்கள் 1989 இன் 12.2 சதவீதத்திலிருந்து 1990 இல் 14.8 சதவீதத்திற்கு அதிகரித்தன. தேறிய காரணி வருவாயையும் வெளிநாட்டிலிருந்தான தனியார் பணவனுப்பல் களையும் உள்ளடக்கிய தேசிய சேமிப்புக்கள் 1990 இல் 52 சதவீதத்தினால் அதிகரித்தன.

### அட்டவணை 1.8

### தேசிய சேமிப்புகள் 1982—1990

(நடைமுறைச் சந்தை விலைகளில்)

(ப இ. ரூபாய்களில்)

| வகை | 1982 | 1988* | 1989* | 1990* |
|---|---|---|---|---|
| 1. மொ. உ. உ. சந்தை விலைகளில் ... | 99,238 | 221,982 | 251,891 | 321,057 |
| 2. உள்நாட்டுச் சேமிப்புகள் ... | 11,770 | 26,676 | 30,801 | 47,417 |
| 3. வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானம் | —1,959 | — 5,266 | —5,738 | —5,942 |
| 4. வெளிநாட்டிலிருந்தான தேறிய தனியார் மாற்றல்கள் ... | 5,494 | 10,187 | 11,840 | 14,813 |
| 5. தேசிய சேமிப்புகள் ... | 15,305 | 31,597 | 36,903 | 56,288 |
| 6. உள்நாட்டு சேமிப்பு விகிதம் (1இன் சதவீதமாக 2)... | 11.9 | 12.0 | 12.2 | 14.8 |
| 7. தேசிய சேமிப்பு விகிதம் (1இன் சதவீதமாக 5) ... | 15.4 | 14.2 | 14.6 | 17.5 |

* தற்காலிகமானவை

மூலம்: இலங்கை மத்திய வங்கி.